இருக்கிறது. அதனால் தான் இந்த மசோதாவை எதிர் கட்சித் தலைவர் சொன்னதுபோல், அதிக விவரமாக இப்பொழுது நாம் அலசிப் பார்க்கா விட்டாலும், நிச்சயமாக ஒட்டு மொத்தமாகப் பொறுக்குக் குழுவிலே இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, எந்தெந்தக் கருத்துக்கள் சொன்னாலும், அவைகளை இந்தச் சட்டத்தின் நடவடிக்கையால் நிறைவேற்றும் வகையில் அந்தக் கருத்துக்கள் எல்லாம் செயல்படும் என்ற உறுதியை இங்கே தந்து, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இம் மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Tne question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of botn the Houses consisting of 30 Members (20 Members of the Assembly and 10 Members of the Council) to consider the Tamil Nadu Town and Country Planning Bill, 1970 (L.A. Bill No. 23 of 1970) and that the following Members of this House be selected to serve on sucn a Joint Select Committee:—

1. Thiru A. R. Damodaran
2. Thiru S. Jayarama Reddiar
3. Thirumathi S. Manjubhashini
4. Thiru S. Mutnu
5. Thiru G. Parangusam
6. Thiru K. Rajaram
7. Thiru N. Sundaresan
8. Thiru G. Swaminatnan
9. Thiru V. Thangapandiar
10. Th'ru V. Venga.

The motion was put and carried.

(2) *The Tamil Nadu Panchayat Courts* (*Validation of Proceedings*) *Bill*, 1970
(*L.A. Bill No.* 31 *of* 1970)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I move :

" That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill,† 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

As the hon. Members are aware, on 10th August, 1965 Thiru R. Venkataraman, the then Minister for Industries, while speaking on the Madras Panchayats Amendment Bill, 1965, informed this House as follows :

" The particulars regarding the number and names of Panchayat Boards which functioned as Courts even after the formation of Panchayat Union Councils and the nature of decrees passed by them are still

†Printed as Appendix II

27th November 1970] [Thiru S. Madhavan]

awaited from some of the Collectors. On receipt of the above particulars, if it were true that some of the defunct Panchayat Courts had tried cases and passed decrees after they had ceased to function legally, then the Government would themselves legislate by introducing an amending Bill.''

Subsequently it was found that in the districts of North Arcot, South Arcot, Madurai and Tirunelveli, such Panchayat Courts had tried cases. This Bill is introduced only to validate the decrees passed by such defunct Panchayat Courts. I trust this House will accept the Bill.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be taken into consideration.''

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்தச் சட்டம் அவசியமாக வெகு நாட்களுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய சட்டமாகும். இது நிறைவேற்றப்படாததால் பல தகராறுகள் இருந்து வந்தன. பலர் பஞ்சாயத்துக் கோர்ட்டு அளித்த தீர்ப்பை நிறைவேற்ற முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். 1950-ஆம் வருஷத்துப் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டின் உப தலைவரையே தலைவராகவும், பஞ்சாயத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டும் ஒரு கோர்ட்டு நடந்து கொண்டிருந்தது. அதாவது, ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் இப்படி ஒரு ''கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு'' நடந்து கொண்டிருந்தது. ஆனால், 1950-ஆம் வருஷச் சட்டத்திலே அது விலக்கப்பட்டு விட்டது. அப்படியிருந்தும், 1958-ஆம் வருஷச் சட்டம் அமலுக்கு வரும்பொழுது, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில ஜில்லாக்களிலே, என்னுடைய ஜில்லாவான மதுரை ஜில்லா உட்பட, கொஞ்சம் கூட மாறுதல் இல்லாமல் எல்லாப் பஞ்சாயத்து கிராமங்களிலேயும், பஞ்சாயத்து இல்லாவிட்டாலும், 'பஞ்சாயத்துக் கோர்ட்டு' நடந்துகொண்டிருந்தது. அவர்கள் அளித்த தீர்ப்புகள் எல்லாம் அப்படியே இருந்தன. ஆனால், அவைகளை எல்லாம் கோர்ட்டுகள் ''எக்ஸிகூஷன்'' செய்ய மறுத்துவிட்டன. இந்தத் தகராறு 10 ஆண்டுகளாக இருந்துகொண்டு, பல கஷ்டங்களை மக்களுக்குக் கொடுத்து வந்தது. அதை எல்லாம் விலக்கத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. எனவே, நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எவ்வளவு சீக்கிரமாக இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து காரியங்களை ஆற்றுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மக்களுக்கு நல்லது என்று கூறி, இந்த 4,5 ஜில்லாக்களிலே இருக்கும் மக்களின் குறைகளைப் போக்க, கொண்டு வந்த இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். 5-10 p.m.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be taken into consideration.''

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3, clause 1, the Long Title, and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : I move—

"That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) *The Tamil Nadu District Municipalities (Amendment) Bill,* 1970 (*L.A. Bill No.* 42 *of* 1970)

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

''சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1970 ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதாவை† (சட்டப் பேரவை மசோதா எண் 42/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920), பிரிவு 68-ல், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதற்குரிய அதிகாரங்களை அளித்தல் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மன்றத்தின் ஒப்பந்தக் குழு, ஒப்பந்தம் செய்து கொள்ளுதற்குரிய தற்போதைய பண வரம்பு ரூ. 1,000 ஆகும். நகராட்சிகள் மேற் கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் காரணமாகத் தற்போதுள்ள உயர் வரம்பான ரூ. 1,000/— உயர்த்தப்பட வேண்டுமென்று கருத்தறி விக்கப்பட்டுள்ளது. இக் கருத்தை அரசு பரிசீலனை செய்து, இதனை ஏற்றுச் செயல்படுத்துவதென முடிவு செய்துள்ளது. இதற்கென, நகராட்சிகள் அனைத்தும், அவற்றின் பொதுக் கணக்கில் பெறப்படும் ஆண்டு வருவாய்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படும். ஒரு நகராட்சி அதன்படி எந்த வகையின் கீழ் கொண்டு வரப்படுகிறதோ, அந்த வகைக்கென உயர்த்தப்பட்டுள்ள உச்ச அள விற்கு ஒப்பந்தக் குழுவானது ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். இம்முறையில் உயர்த்தப்பட்டுள்ள அதிகாரங்களின் விவரங்களை மாண்பு மிகு உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ள மசோதா வில் கண்டு கொள்ளலாம்.

†Printed as Appendix III